1/250385/2023

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின்
செயல்முறைகள் முன்னிலை திரு.கி.ரங்கராஜன்,

ப.மு. அ1-18088 – 2023 நாள். 11-03-2023

| | |
|---|---|
| பொருள் | பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர் தொகுதி – தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகு – காலஞ்சென்ற கிராம உதவியாளர் திரு.க.சந்திரகாசன் என்பவரின் மகன் திரு.ச.சதீஷ்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டது – தொடர்பாக. |
| பார்வை | 1. அரசாணை (நிலை)எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள்.23.01.2020<br>2. சென்னை கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித ந.க.பணி-15508/பணி-9(2)/2022-2, நாள்.15.02.2023<br>3. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை ந.க.அ1 – 28798- 2018 நாள்.13.02.2020.<br>4. அரசாணை (3டி) எண்.22 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பணிகள் அலகு பணி-9(2) பிரிவு நாள்.15.02.2023<br>5. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் |

-----------

002907

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பார்வை 3-இல் காணும் செயல்முறை ஆணைகளின்படி பணிநியமனம் பெற்று திருவிடைமருதூர் வட்ட அலுவகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு.ச.சதீஷ்குமார் என்பவரது பணியினை வரன்முறை செய்து பார்வை 4-இல் காணும் அரசாணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து அவர் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 24.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

RANGARAJAN
மாவட்ட ஆட்சியரின்
நேர்மக உதவியாளர் (பொது)
தஞ்சாவூர்

பெறுநர்

திரு.ச.சதீஷ்குமார்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்ட அலுவலகம், திருவிடைமருதூர்.

நகல் – கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை

நகல் – வட்டாட்சியர், திருவிடைமருதூர்.
(தனியரது பணிப்பதிவேட்டில் பதிவுகள் செய்யும் பொருட்டு)

நகல் – இருப்பு கோப்பு

நகல் – அ1 இருக்கைக்கு

Signed by Rangarajan
Date: 11-03-2023 16:51:03

ஆட்சியர் அலுவலகம் 6 APR 2023

Scanned with CamScanner

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகு – திரு.ச.சதீஷ்குமார், த/பெ. காலஞ்சென்ற திரு.க.சந்திரகாசன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
பணிகள் அலகு, பணி–9(2) பிரிவு

அரசாணை (3டி) எண்.22

நாள் 15.02.2023.
சுபகிருது வருடம், மாசி–03,
திருவள்ளுவராண்டு 2054.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண். ஆகு4/2145224/2022, நாள் 17.09.2022.

******

ஆணை:–

தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில், கிராம உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே 18.07.2018 அன்று காலமான திரு.க.சந்திரகாசன் என்பவரின் மகன் திரு.ச.சதீஷ்குமார் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில், பணிநியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் விண்ணப்பம் அளித்திருந்தார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டு, தனியர் 24.02.2020 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திரு.ச.சதீஷ்குமார் என்பவரை தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 24.02.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வேண்டி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையருக்கு முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

2. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ஏற்று, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

//த.பி.பா//

Scanned with CamScanner

3. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர், தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ச.சதீஷ்குமார் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 24.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.690/க்யூ2/2023-1, நாள் 02.02.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4046375/ஜி2/2023-1, நாள் 06.02.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5.
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம்.
திரு.ச.சதீஷ்குமார், இளநிலை உதவியாளர்
(தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் மூலமாக)

நகல்
தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

17/2/23
பிரிவு அலுவலர்.

15.02.2023

A2
2907
(1)
6/4/23